This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# 1. கருப்புக் குதிரை

கிரிக்கெட் கிச்சா என்று என்னைத் திருவல்லிக்கேணி வட்டாரத்தில் தெரியும். சர்வதேச அளவில் 'அம்பயர் கே.சுவாமி', ஜான் ஆர்லாட்கூட இறப்பதற்குமுன் என்னைப் பற்றி மிக்க மரியாதையுடன் பேசியிருக்கிறார். எனக்குச் சின்ன வயசிலிருந்தே கிரிக்கெட் பிரேமை. ஸ்கூல் காப்டனாக இருந்தேன். பின், பல்கலைக்கழகத்துக்கு ஆடினேன். நான் போட்ட லெக்பிரேக், 'கூக்ளி'களை அடிக்க முடியாமல் ஸ்டம்ப் சிதறியவர்கள் ஏராளம்.

ரஞ்சி டிராபிக்காகத் தமிழ்நாடு அணிக்கு செலக்ட் ஆகி, அந்த சீஸனுக்கு முதல் ஆட்டம் கேரளாவுடன். கொச்சினுக்குப் போனபோது என் வாழ்க்கை திசைமாறியது. டாஸ் ஜெயித்து ஃபீல்டிங் எடுத்தோம். கொச்சின் ஜிம்கானாவுக்கு எதிரே உள்ள பசும் புல் மைதானத்தில்தான் 'ஃபைன்லெக்'கில் நின்று கொண்டிருந்தபோது, எங்கள் வேகப் பந்தாளர் பிரசாத் போட்ட பந்தைக் கேரள பாட்ஸ்மேன் தொட்டுவிட்டதில், சர்ரென்று பந்து ஸ்லிப்புக்கும் விக்கெட் கீப்பருக்கும் தண்ணி காட்டிவிட்டு விரைந்தது. அதை நான் ஃபைன் லெக்கிலிருந்து குறுக்கிட்டுத் தேக்க ஓடி வந்தேன். பவுண்டரி கோட்டைக் கடப்பதற்கு ஒரு இன்ச் இருக்கும்போது சர்ரென்று வழுக்கி நிறுத்தினேன். கைதட்டி என்னைப் பாராட்டினார்கள். ஆனால், நான் எழுந்திருக்கவில்லை. வந்த வேகத்தில் ஒரு ஆயுர்வேத சோப் விளம்பரத்தின் இரும்புக் காலில் டமால் என்று மோதியிருந்தேன். எழுந்திருக்க முயற்சித்தபோது மூலத்தைப் பிடிக்கிறாற் போல வலித்தது. ஸ்ட்ரெச்சர் கொண்டுவந்து என்னை அள்ளிச் சென்றார்கள். நான் மேலும் ஆட்டத்தில் பங்கேற்க முடியாமல்...முக்கியமான ஸ்ட்ரைக் போலர் இல்லாததால், முதல் இன்னிங்ஸ் லீடு கேரளாவுக்குத் கொடுத்து. முழு பாயிண்ட் எடுக்க முடியாமல் கேரளாவுடன் 'ட்ரா'! டிரெஸ்ஸிங் ரூமில் அழுதேன்.

அதன் பின் நான் கிரிக்கெட் ஆடவில்லை. வலது காலில் முறிவு. ஆபரேஷன் செய்து, எலும்புத் துண்டுகளை நீக்கி, ப்ளேட் போடும்படி ஆகி, இப்போகூட விந்தி விந்தித்தான் நடக்கிறேன்.

"போறும் போறும்... நீங்க கிரிக்கெட் ஆடினது. பகவானா பார்த்துக் தடுத்துட்டார்...காலை உடைச்சுண்டதும், அலமாரி நிறைய சொப்பு சொப்பா கப்பும், போட்டோ ஆல்பமும்தான் மிச்சம்...எல்லாம் போறும்...இனிமே அலைய வேண்டாம்." என்றாள் என் மனைவி சுந்தரி.

அவளுக்கு கல்யாண தினத்திலிருந்தே கிரிக்கெட் மேல் வெறுப்பு. முதலிரவின்போது நடுவே நிறுத்திவிட்டு, ஆஸ்திரேலியா வெஸ்ட் இண்டீஸ் மாட்ச்சைப் பார்த்துவிட்டு வந்தது தப்புதான். அந்தக் குற்றத்தை அவள் மன்னிக்கவே இல்லை. 'மறுபடி கிரிக்கெட் ஆடுவதை மறந்துவிடு...'' என்று டாக்டர் மாருதிராவும் சொன்னார்.

"டாக்டர், அது எப்படி...? மனம் முறிஞ்சு தற்கொலை பண்ணிக்கக்கூடத் தோணுது. ரத்தத்தில் கிரிக்கெட் அப்படி ஊறியிருக்கு டாக்டர்.!"

"டோண்ட் பி சில்லி. நீங்க ஆட விரும்பினாலும் உங்க கால் ஆடாது. பேட்டிங், போலிங், எல்லாத்துலயும் வலிக்கிறதோல்லியோ...?"

"ஆமாம்!"